# செய்தி வெளியீடு

## காந்தியடிகளின் 150வது பிறந்த தினத்தை முன்னிட்டு மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் அவர்கள் ஆளுநர் மாளிகையில் காந்தியடிகளின் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தியும், தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் தூய்மை பணியினை துவக்கி வைத்தார்

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் அவர்கள் காந்தியடிகளின் 150வது பிறந்த தினத்தை முன்னிட்டு ஆளுநர் மாளிகையில் காந்தியடிகளின் சிலைக்கு அருகில் காந்தியடிகளின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தியும், தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் தூய்மை பணியினை இன்று (02.10.2018) துவக்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் அவர்கள் காந்தியடிகளின் 150வது பிறந்த தினத்தை முன்னிட்டு ஆளுநர் மாளிகையில் உள்ள அவரது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

காந்தியடிகளின் 150வது பிறந்த தினத்தை முன்னிட்டு ஆளுநர் மாளிகையில் தூய்மை பாரத இயக்கத்தின் கீழ், தூய்மை பாரத இயக்கத்தின் துப்புரவு உறுதிமொழியை ஆங்கிலத்தில் வாசிக்க 39 பள்ளிகளிலிருந்து வருகைதந்த 1000த்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் மற்றும் ஆளுநர் மாளிகையில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உறுதி மொழி எடுத்துக் கொண்டனர். அடுத்ததாக, மாணவ மாணவியர் உறுதிமொழியை தமிழில் வாசிக்க, அனைவரும் தமிழிலும் உறுதிமொழியை ஏற்றனர்.

பின்பு ஆளுநர் அவர்கள் தூய்மை பணியினை துவக்கி வைத்தார். அதை தொடர்ந்து 39 பள்ளிகளிலிருந்து வருகைதந்த 1000த்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் ஆளுநர் மாளிகை வளாகத்தில் தூய்மை பணியில் ஈடுபட்டார்கள். இதையடுத்து பள்ளி மாணவ மாணவியர்கள், ஆளுநர் மாளிகையை சுற்றிப்பார்த்து, ஆளுநர் மாளிகை வனப்பகுதியில் நடைபயிற்சியும் மேற்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், ஆளுநரின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ஆர்.ராஜகோபால், இ.ஆ.ப., ஆளுநர் அலுவலக அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், ஆளுநர் மாளிகை குடியிருப்பில் குடியிருப்போர் கலந்துக் கொண்டனர்.

---

ராஜ்பவன், சென்னை - 22 ஒம்/-

நாள்: 02.10.2018 இணை இயக்குநர் (ம.தொ)